

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.10.2025) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அவர்களின் உடல்நலம் குறித்து அவரது குடும்பத்தினரிடம் கேட்டறிந்தார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.10.2025) சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வரும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் ராமதாஸ் அவர்களை சந்தித்து உடல்நலம் விசாரித்தார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.10.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.4,000/லிருந்து ரூ.5,000/ஆகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.2,000/லிருந்து ரூ.2,500/ஆகவும் உயர்த்தி, தொழிலாளர் சேமநலநிதி (EPF) மூலம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முதன்முறையாக துறை நிலையிலான ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்திற்கு இணையாக கருணைக் தொகை (EXgratia) வழங்கி, 3,037 ஓய்வூதியதாரர்கள் மற்றும் 769 குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 12 நபர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்திற்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் ந.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.10.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் முதுமலை புலிகள் காப்பகம் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகம் ஆகியவற்றில் காலியாகவுள்ள காவடி பணியிடங்களை நிரப்பிடும் வகையில் 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.10.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளையின் அறங்காவலர் ஆர்.பாலகிருஷ்ணன் எழுதிய 'சப்யாதா கி யாத்ரா: சிந்து சே வைகை' (ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை) இந்தி மொழிபெயர்ப்பு நூலினை வெளியிட, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில், திண்டுக்கல் ஐ.லியோனி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## வேலூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில்

# 40 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள்!

## அமைச்சர் துரைமுருகன் தகவல்!

**வேலூர், அக்.8 -**

**வேலூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 40 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்.**



வேலூர் மாவட்டம் காட்பாடி செங்குட்டை வார்டு 4 பகுதியில் அரக்கோணம் எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.80 லட்சம் மதிப்பில் புதிய சமுதாய கூடம், காட்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்

ரூ.20 லட்சம் மதிப்பில் விழா மேடை அமைப்பதற்கான பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நடந்தது.

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி தலைமை தாங்கி பேசினார்.

எம்.பி.க்கள் எஸ். ஜெகத்ரட்சகன், டி.எம். கதிர் ஆனந்த், மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகராட்சி கமிஷனர் லட்சுமணன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

விழாவில் கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்துகொண்டு சமுதாயக்கூடம், விழா மேடை அமைப்பதற்கான அடிக்கலை நாட்டி சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது;

காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் நான் 1971ம் ஆண்டு எம்.எல்.ஏ.வாக தேர்ந்து எடுக்கப்பட்டேன்.

அப்போது இந்த பகுதி கிராமப்புற பகுதியாக இருந்து, பின்னர் பேரூராட்சியாக, நகராட்சியாக, தற்போது மாநகராட்சியாக மாறியுள்ளது. அப்போது முதல் நான் தொடர்ந்து எம்.எல்.ஏ.வாக இருந்து வருகிறேன்.

பாலாற்றில் இருந்து காட்பாடி பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடிநீர் சற்று உப்பு கலந்த குடிநீராக இருந்து வந்தது. பொதுமக்களின் இந்த குறையை போக்குவதற்காக பாலாற்றில் இருந்து சிறப்பு திட்டத்தை கொண்டு வந்து குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. ஒரு கட்டத்தில் பாலாற்றிலும் தண்ணீர் வறண்டு இருந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த பொழுது அவரை காட்பாடிக்கு அழைத்து வந்து இந்த பகுதிக்கு காவிரி கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்படும் என்பதை தெரிவித்து அதற்கான பணியையும் தொடங்கி வைத்தோம். அதன்படி இந்த பகுதிகளுக்கு காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

நான் எம்.எல்.ஏ.வாக தேர்ந்து எடுக்கப்பட்டபோது காட்பாடி பகுதியில் ஒரே ஒரு அரசு பள்ளி மட்டுமே இருந்தது. தற்போது இந்த பகுதியில் மட்டும் 25க்கும் அதிகமான மேல்நிலைப் பள்ளிகள் உள்ளது.

காட்பாடி பகுதிக்கு புதிய துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் கொண்டு வரப்பட்டுள்ளது. புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது, பொன்னை பகுதியில் ரூ.45 கோடி மதிப்பில் பொன்னை ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது.

பொன்னை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகளும் கட்டப்பட்டுள்ளது. காட்பாடியில் பழைய ஏரிகளான கழிஞ்சூர் மற்றும் தாராபடவேடு ஏரிகள் ஒன்றிணைக்கப்பட்டு சிறந்த சுற்றுலா தளமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏரிகளில் விரைவில் படகு சவாரி தொடங்கப்பட உள்ளது.

காட்பாடியில் கூடுதலான ரெயில்வே மேம்பாலம் விரைவில் புதிதாக அமைக்கப்பட உள்ளது. சேர்க்காடு பகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு அங்கு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சேர்க்காடு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த பொது மக்களுக்கு நல்ல தரமான சிகிச்சைகளை வழங்க ஏதுவாக சேர்க்காடு பகுதியில் 60 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையை முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்.

இந்த மருத்துவமனை படிப்படியாக 100 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும்.

வேலூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 40 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

விழாவில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழுத் தலைவர் ஜி.புஷ்பலதா வன்னியராஜா, ஒன்றியக்குழுத் தலைவர் வேல் முருகன், துணைத் தலைவர் எஸ். சரவணன், காட்பாடி தாசில்தார் ஜெகதீஸ்வரன், வேலூர் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கே.முரளிபாஸ்கர் மாநகராட்சி கவுன்சிலர்கள் சித்ரா லோகநாதன், விமலா சீனிவாசன், சித்ரா மகேந்திரன், கே.ஜி.சீனிவாசன், சாமுண்டீஸ்வரி குணாளன், மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் மாநகராட்சி கவுன்சிலர் ஆர்.அன்பு நன்றி கூறினார்.

## பா.ம.க. நிறுவனத் தலைவர்

# மருத்துவர் ராமதாஸ் அய்யா விரைந்து நலம்பெற விழைகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 8 -

அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் மருத்துவர் ராமதாஸ் அவர்களை சந்தித்து உடல்நலம் விசாரித்தது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டின் மூத்த அரசியல் தலைவர் பெருமதிப்பிற்குரிய மருத்துவர் ராமதாஸ் அய்யா அவர்களைச் சந்தித்து, அவரது உடல்நலன் குறித்துக் கேட்டறிந்தேன்.**

**அவர் விரைந்து நலம்பெற்று, தமது வழக்கமான பணிகளைத் தொடர்ந்திட விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




சென்னை, தரமணி மைய தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் (06.10.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தில் பணிபுரிந்து, பணிக் காலத்தில் மறைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 5 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் பொ.சங்கர், திருமதி. இன்னசென்ட் திவ்யா, ஓ.ஜி.தரணிபதி மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உள்ளனர்.